HMOP. No.204/2023

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் – 28.11.2025

ம.சா.2–கலாவதி க/பெ –ஈசாக்ராஜ்

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் விருதுநகர், அய்யனார்நகரில் கடந்த 50 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். தர்மராஜ் மற்றும் மாரியம்மாளை எனக்கு தெரியாது. மனுதாரர் மாரிச்செல்வி பிறப்பு சான்று தாக்கல் செய்யவில்லை. எனது மகளுக்கு பிறப்பு சான்று வாங்கவில்லை. மனுதாரர் எனது மகள் இல்லை என்றால் சரியல்ல. எனது மகளை எனது மருமகன் ஸ்குரூ டிரைவரால் தாக்க வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு தவறான துர்போதனையை சொல்லி வழக்கு தாக்கல் செய்ய வைத்தேன் என்றால் சரியல்ல. மனுதாரர் எனது வளர்ப்பு மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.